11th December 1959]

* 132 *Q.*—SRIMATHI T. N. ANANDANAYAKI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether raw rice is sold at the Fair Price Shops in the City of Madras; and

(*b*) if not, why?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) Does not arise.

N.C.C. Training

* 133 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தற்பொழுது இம் மாநிலத்தில் எத்தனை பள்ளிகளில் என்.சி.சி. பயிற்சி அளிக்கப்படுகிறது?

(ஆ) இப் பயிற்சி மேலும் விஸ்தரிக்கப்படுமா?

(இ) ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் இத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர உத்தேசமுண்டா?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) In 299 schools.

(*b*) Yes, Sir.

(*c*) No, Sir.

SRI A. VEDARATHNAM : மேலும் எத்தனை பள்ளிகளில் விஸ்தரிக்கப் படுகிறது? எந்த முறையிலே, விஸ்தரிப்பு பள்ளிகள் தேர்ந்து எடுக்கப்படுகின்றன?

THE HON. SRI C. SUBRAMANIAM : எந்தப் பள்ளிக்கூடங்களில் வசதிகள் உள்ளனவோ, அந்தப் பள்ளிக்கூடங்கள் என்.சி.சி.-க்குத் தேர்ந்தெடுக்கிறோம். ஒவ்வொரு வருஷமும் பட்ஜட் தொகை எவ்வளவு ஒதுக்கப்படுகிறது என்பதைக் கணக்கிட்டு, போதிய அளவு இல்லாவிட்டால் அடுத்த வருஷத்தில் அந்த அளவுக்கு அபிவிருத்தி செய்யப்படுகிறது. பொருத்திருந்து பட்ஜட்டிலே பார்த்தால் தெரியும்.

SRI A. VEDARATHNAM : பெண்களுக்கு அந்தப் பள்ளிகளில் இம்மாதிரியான பயிற்சிக்கு ஏதாவது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா? அப்படியானால் அதன் விவரத்தை அறிவிக்க முடியுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : பெண்களுக்கும் இந்த என்.சி.சி. பள்ளிக்கூடத்தில் இடம் அளிக்கப்பட்டிருக்கிறது.

MR. SPEAKER : As the hon. Member Sri K. Sattanatha Karayalar is not present, question No. 134 and the answer thereto will be printed in the proceedings.